சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள் சென்னை-08

ந,கஎண்,2482 /அ5/2021 நாள் .21.04.2022

| | |
|---|---|
| **பொருள்** | பள்ளிக்கல்வி - சென்னைமாவட்டம் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வு பணிகள் – வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள் , துறை அலுவலர்கள், கூட்டம் நடத்துதல்- தவறாது கலந்து கொள்ள அறிவுறுத்துதல் – சார்ந்து, |
| பார்வை | **சென்னை-06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 024893/எச்4/2022 நாள் 19.04.2022** |

**பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின்** கடிதத்தின் படி **மே 2022 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் பணிக்கு வினாத்தாள் கட்டுக்காப்பாளர், முதன்மைக்கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர்களுக்கான தேர்வு சார்ந்த வழிக்காட்டுதல் கூட்டம் சென்னை 31, சேத்துப்பட்டு ,எம்,சி.சி மேல்நிலைப்பள்ளியில் 22.04,2022 அன்று பிற்பகல் 2.30. மணிக்கு கூட்டம் நடைபெறுகிறது,**

**இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ள அரசு/ அரசு** உதவிபெறும் / **சென்னை பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் அரசு/சென்னை பள்ளி முதுகலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சார்ந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

அனைத்து **மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களை கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,**

| **வ,எண்** | **கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் பள்ளியின் பெயர்** | **நாள் மற்றும் நேரம்** |
|---|---|---|
| 1 | **எம்.,சி.சி மேல்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை 31** | **22.04.2022 பிற்பகல் 2,30 மணி** |

இணைப்பு : 1 வினாத்தாள் கட்டுக்காப்பாளர், முதன்மைக்கண்காணிப்பாளர்கள்,
துறை அலுவலர்கள் விவரம் .
2 தேர்வு கையேடு

குறிப்பு : வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் ,முதன்மைக்கண் காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் தேர்வுக் கையேட்டில் உள்ள அறிவுரைகளை நகலெடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

ஒம்/-

**முதன்மைக்கல்வி அலுவலர்**

**சென்னை**

**பெறுநர்**

**1 சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்,**

**2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள். சென்னை மாவட்டம்.**